Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 8/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW6 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | கணேஷ்ராம் |
| Father's Name | – | கருப்புசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 20th June 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1 to A6 absent. 317 Petition filed and allowed. Counsels are present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது மாநில விலங்கான நீலகிரி வரையாடு திட்டத்தின் துணை இயக்குநராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2013 ம் வருடம் ஆனைமலை புலிகள் காப்பகம் பொள்ளாச்சி வனச்சரகத்தில் வனச் சரக அலுவலகராக பணியில் இருந்தபோது 21.08.2013 ம் தேதியன்று பொள்ளாச்சி நகர மேற்கு காவல் ஆய்வாளர் அவர்கள் கடந்த 19.08.2013 ம் தேதியன்று கோவை பொள்ளாச்சி ரோட்டில் நல்லப்பா தியேட்டர் அருகில் டாரஸ் வாகன எண்.AP 26X 6829 என்ற வாகனத்தில் செம்மரக் கட்டை கடத்திவந்ததை சோதனையில் கைப்பற்றி அதனைத் தொடர்ந்து 21.08.2013 ம் தேதி காலை சுமார் 8 மணியளவில் கோவை-பொள்ளாச்சி ரோட்டில் நல்லப்பா தியேட்டர் அருகே வாகன சோதனையின்போது KL 41 B 2929 எண்ணுடைய இன்னோவா காரில் வந்த நபர்களிடம் போலிஸ் பார்ட்டி விசாரித்தபோது அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்ததைத் தொடர்ந்து அவர்களைத் தொடர்ந்து போலிசார் விசாரணை மேற்கொண்டபோது 19.08.2013 ம் தேதியன்று போலிசாரால் கைப்பற்றப்பட்ட செம்மரம் கடத்திவரப்பட்ட வாகனம் மற்றும் மேற்படி செம்மரத்தை கடத்தி வந்தவர்கள் என்று கூறிய நபர்களை போலிசார் விசாரித்து கைது செய்து ஆனைமலை துணை இயக்குநர் அவர்களிடம் மேல் நடவடிக்கைக்காக ஒப்படைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து துணை இயக்குநர் அவர்கள் வழக்கு பதிவு செய்யவேண்டி பொள்ளாச்சி வனச்சரக அலுவலகரான என்னை நியமித்து போலிஸ் பார்ட்டி வசம் என்னிடம் ஒப்படைத்தார். மேற்படி போலிசார் தனி அறிக்கை ஒன்றை மாவட்ட வன அலுவலகர் மற்றும் துணை இயக்குநர் அவர்களிடம் அளித்தனர். பின்னர் மேற்படி தனி அறிக்கையுடன் மேற்படி எதிரிகள் மற்றும் வழக்குச் சொத்துக்களை என்னிடம் ஒப்படைத்தார்கள். நான் அதனை தணிக்கை செய்யும்போது அது செம்மரக் கட்டைகள் என உறுதிசெய்தேன். பின்னர் அர்த்தநாரிபாளையம் சுற்று வனக்காப்பாளர் திரு மாரிமுத்து அவர்கள் அந்த செம்மரக் கட்டைகளுக்கு வெள்ளை மையால் வரிசை எண் இட்டு அரசு முத்திரை பதிவு செய்தார்.

சேத்துமடை கிழக்குச் சுற்று வனவர் திரு சங்கரநாராயணன் செம்மரக் கட்டைகளின் நீளம் மற்றும் சுற்றளவு எடுத்தார். கோட்டுர் பிரிவு வனவர் திரு தங்கவேல் அவர்கள் செம்மரக்கட்டைகள் ஒவ்வொன்றாக எடைபோட்டு பார்த்தார். என்னால் எடை மகஜர் தயார் செய்யப்பட்டது. மேற்படி செம்மரக்கட்டைகள் 172 யின் மொத்த எடை 5650.500 கிலோ கிராமினை அர்த்தநாரிபாளையம் சுற்று வனக்காப்பாளர் திரு மாரிமுத்து அவர்கள் தனது H நமுனா ன் மூலம் கைப்பற்றினார். பின்னர் எதிரிகள் ரவி மற்றும் முஜிஸ் ஆகியோர்

தாங்களே வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை என்னாலும் பாஸ்கரன் மற்றும் வினு ஆகிய எதிரிகள் தானே முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை திரு மாரிமுத்து வனக்காப்பாளரும் சுஜித் என்ற எதிரி தானே முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை திரு தங்கவேல் வனவரும் எதிரி நவ்சாத் தானே முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை திரு சங்கரநாராயணன் வனவர் அவர்களும் பதிவு செய்தோம்.

எதிரி ரவி விசாரணையின் போது தெரிவித்த தகவலின்படி பொள்ளாச்சி -கோவை ரோட்டில் உள்ள ஏஎஸ்டி குடோனில் மேலும் செம்மரக்கட்டைகள் இருப்பதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து துணை இயக்குநர் அவர்களிடம் ஏஎஸ்டி குடோனை சோதனை செய்யவேண்டி சோதனை ஆணை பெறப்பட்டு பொள்ளாச்சி தாசில்தார் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு அவரின் உத்தரவின்படி அப்பகுதி கிராம நிர்வாக அலுவலகர் அவர்களை அழைத்துக் கொண்டு தனிக்குழு உடன் ஏஎஸ்டி குடோன் சென்றடைந்து செம்மரம் உள்ள குடோன் பகுதியினை எதிரி ரவி தெரிவித்ததைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள குடோனின் ஷட்டர் பூட்டு போடாமல் ஷட்டர் மட்டும் இறங்கியிருந்தது.

அதைத் தொடர்ந்து குடோனின் உரிமையாளர் அப்பகுதியில் இல்லாத காரணத்தால் விஓ அவர்கள் தேடும் ஆணையினை சுவற்றில் ஒட்டி ஷட்டரைத் திறந்து தணிக்கை செய்தபோது செம்மரக்கட்டைகள் அடிக்க வைக்கப்பட்டது தெரியவந்தது. அதைத் தொடர்ந்து அர்த்தநாரிபாளையம் பிரிவு சுற்றின் வனக் காப்பாளர் மாரிமுத்து அவர்கள் அச்செம்மரக்கட்டைகளுக்கு வெள்ளை மையால் வரிசை எண்ணும் அரசு முத்திரையும் பதிவுசெய்தார். சேத்துமடை கிழக்குச் சுற்று வனவர் திரு சங்கரநாராயணன் அவர்கள் செம்மரக்கட்டைகளின் நீளம் மற்றும் சுற்றளவு எடுத்தார்.

கோட்டூர் பிரிவு வனவர் தங்கவேல் அவர்கள் செம்மரக்கட்டைகள் எடை பார்த்து என்னால் எடை மகஜர் தயார் செய்யப்பட்டது. செம்மரக்கட்டைகள் 354 மொத்த எடை 10,570 கிலோ கிராம் ஆகும். இதனை அர்த்தநாரிபாளையம் சுற்று வனக்காப்பாளர் தனது H நமுனா மூலம் கைப்பற்றினார். என்னால் ஸ்தல மகஜர் தயார்செய்யப்பட்டது. எதிரி ரவி வாக்குமூலம் என்னால் பதிவு செய்யப்பட்டது. பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் எதிரியையும் பொள்ளாச்சி வனச்சரகம் கொண்டுசெல்லப்பட்டு என்னால் STOR No.4/2013 பதிவு செய்யப்பட்டு வனச்சட்டம் 1882 பிரிவு 35 (பி) , 36 (ஏ மற்றும் ஈ) 1970 ம் ஆண்டு அட்டவணைப்படுத்தப்பட்ட வைப்பு விதி 3(1) ன்படியும் 1967 ம் ஆண்டு அட்டவணைப்படுத்தப்பட்ட மரங்கள் எடுத்துச் செல்லும் விதி பிரிவு 3 மற்றும் 4 ன் படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

மேற்படி எதிரிகளை என்னால் பார்த்தால் அடையாளம் காண இயலும். (எதிரிகள் மனுவின்பேரில் ஆஜரில்லை). மேற்படி எதிரிகளை துணை இயக்குநர் அவர்கள் முன்னிலையில் ஆஜர்படுத்தி வனச்சட்டம் 1882 49 (ஏ) பிரிவு அதிகாரத்தின்படி துணை இயக்குநர் அவர்கள் பொள்ளாச்சி வனச்சரகத்தின் பாதுகாப்பில் வைக்க உத்தரவிட்டார்.

பின்னர் எதிரிகளை நீதிமன்றக் காவலுக்குட்படுத்தப்பட்டது. வழக்குச் சொத்தினை பாதுகாப்பாக வைத்து அதற்குண்டான ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன்.

போலிசார் தனி அறிக்கை தாக்கல் செய்தபோது எதிரிகளிடம்இருந்து கைப்பற்றிய பொருட்களுக்கு ஆன மகஜர் **புசாஆ.2**

2 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் **புசாஆ.3**

3 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் **புசாஆ.4**

4 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் **புசாஆ.5**

5 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் **புசாஆ.6**

6 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் **புசாஆ.7**

மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தினை என்னாலும் என் முன்னிலையிலும் பதிவுசெய்யப்பட்டன.

ஸ்தல மகஜர் **புசாஆ.8**

வனச்சரக அலுவலகத்தில் தயார் செய்யப்பட்ட H நமூனா எண்.129490 **புசாஆ.9**

ஏஎஸ்டி குடோனில் தயார் செய்யப்பட்ட H நமூனா **புசாஆ.10**

வனச்சரக அலுவலகத்தில் தயார் செய்யப்பட்ட எடை மகஜர் **புசாஆ.11**

ஏஎஸ்டி குடோனில் தயார் செய்யப்பட்ட எடை மகஜர் **புசாஆ.12**

சம்பவ இடத்தினைக் காட்டும் வரைபடம் **புசாஆ.13**

துணை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட சோதனை ஆணை **புசாஆ.14**

ஏஎஸ்டி குடோனில் கைப்பற்றப்பட்ட செம்மரக்கட்டைகள் பிடி பொருள் மகஜர் **புசாஆ.15**

எதிரிகளிடம் கைப்பற்றப்பட்ட படிவம் 95 (6 எண்ணிக்கை) **புசாஆ.16**

எதிரிகளிடம் கைப்பற்றப்பட்ட பணத்தின் வரிசை எண் விபரம் **புசாஆ.17**

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (3 முதல் 6 எதிரிகள் 1, 2 எதிரிகளின் குறுக்குவிசாரணையை தமதாக ஏற்றுக்கொள்கிறார்கள்)**

19.08.2013 ம் தேதி அதிகாலை 4 மணிக்கு வழக்குச் சொத்து உள்ளிட்ட லாரியைக் கைப்பற்றியதாகத்தான் தனி அறிக்கையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி விபரத்தை 21.08.2013 ம் தேதிதான் என்னிடம் தெரிவித்தார்கள் என்றால் சரிதான். எதிரிகளை 21.08.2013 ம் தேதியன்று கைது செய்தார்கள் என்றால் சரிதான். ரவியின் வாக்குமூலத்தின் மூலமாக விஜயகுமாரை 1ம் எதிரியாகச் சேர்த்தோம் என்றால் சரிதான். ரவி கூறியதன்

அடிப்படையில் விஜயகுமார்தான் செம்மரக்கட்டைகளை கடத்தினார் என தெரியவந்தது. விஜயகுமாரை தற்போது வரை பிடிக்கவில்லை என்றால் சரிதான், நான் இருக்கும் வரை தேடிப்பார்த்தேன் கிடைக்கவில்லை. எதிரிகளையும் வழக்குச்சொத்தையும் எங்கு வைத்து என்னிடம் ஒப்படைத்தார்கள் என்றால் மீன்கரை ரோட்டில் உள்ள பொள்ளாச்சி வனச்சரக அலுவலகத்தில் வைத்து என்னிடம் ஒப்படைத்தார்கள்.

எந்த லாரியில் செம்மரக்கட்டைகளை கடத்தினார்களோ அதே லாரியில்தான் செம்மரக்கட்டைகளுடன் என்னிடம் ஒப்படைத்தனர். வனச்சரக அலுவலகத்தில் வைத்து செம்மரக்கட்டைகள் அளவு எடுக்கப்பட்டன. எடை பார்க்கும் கருவி வெளியில் இருந்து கொண்டுவரப்பட்டது. பிடிபட்ட லாரியை எங்கள் கைவசம் வைத்திருந்தோம், நான் மாறுதல் ஆகி சென்றபின்பு ஒப்படைத்துவிட்டுச் சென்றுவிட்டேன், அதன் பின்பு என்ன செய்தார்கள் என்று தெரியாது. நீதிமன்ற ஆவணங்களில் லாரியைப் பற்றிய குறிப்பு இல்லை என்றால் கைது குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ளோம்.

ஏஎஸ்டி குடோனில் மரம் இருப்பது பற்றி போலிசார் கொடுத்த தனி அறிக்கையில் உள்ளது, பின்பு நான் ரவியை விசாரித்தபோது அவரும் ஒப்புக்கொண்டு கூறினார், அதனடிப்படையில் நான் கைப்பற்றினேன். நான் ஏஎஸ்டி குடோனுக்கு தனிக்குழு மற்றும் வீஓ உடன் 21.08.2013 ம் தேதியன்று பிற்பகல் சென்றோம். மேற்படி குடோனில் நான் சென்றபோது போலிசார் இருந்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. மேற்படி குடோனில் 345 மரத்துண்டுகள் இருந்தன. எடைக்கருவியை எடுத்துச்சென்று கைப்பற்றி இடத்தில் வைத்து அளவு செய்தோம்.

எதிரிகளிடம் கைப்பற்றிய செல்போன்கள் மற்றும் பணத்தினை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார்கள். என்னால் கைப்பற்றப்பட்ட செல்போன்கள் மற்றும் பணம் நாளது தேதிவரையில் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. ஏஎஸ்டி குடோன் உரிமையாளரை நாங்கள் விசாரிக்க முயற்சித்தோமா என்றால் அவரை கண்டுபிடிக்க இயலவில்லை, ஆனால் 3ம் நபர் மூலமாக மேற்படி குடோன் தொடர்பான குத்தகை ஆவணத்தை கொடுத்து அனுப்பிவைத்தார். மேற்படி குத்தகை ஆவணம் தலைமறைவான விஜயகுமாருக்கும் குடோன் உரிமையாளருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் என்றால் சரிதான்.

ஏஎஸ்டி குடோனின் உரிமையாளரை STOR அறிக்கையில் எதிரியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். போலிசாரால் கைது செய்யப்பட்ட எதிரிகளை என்னிடம் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட இன்னோவா காரினை என்வசம் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி காரை துணை இயக்குநர் அவர்களின் உத்தரவின்படி என் கட்டுப்பாட்டில் வைத்திருந்தேன். பின்னர் அந்த

வாகனத்தை என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது.

செம்மரக்கட்டை எங்கிருந்து கொண்டுவரப்பட்டது ,அதன் உரிமையாளர் யாரென்பது குறித்து எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலங்கள் அனைத்தும் வனத்துறை அலுவலகர்கள் முன்னிலையிலும் அவர்களால் பெறப்பட்டது என்றால் சரிதான். 1, 2 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் குறிப்பிட்டுக் கூறிய நேரத்தில் இடத்திலும் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. செம்மரக்கட்டைகளுக்கும் எதிரிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. புள்ளிவிபரக் கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்குப் புனையப்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் கொடுத்த தவறான தனி அறிக்கையின் மீது சரிவர விசாரணை செய்யாமல் பொய்யாக வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/- Thiru. E. Pragasam B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.